## அங் மோ கியோ தமிழ் மெதடிஸ்ட் திருச்சபை
## ANG MO KIO TAMIL METHODIST CHURCH

# ஞாயிறு ஆராதனை/ *Sunday Service*

**27th Aug 2023 9.30am**

✝ ஆராதனைக்கு அழைப்பு — திரு. ஜான் நேசன்
Call to Worship — Mr. John Nesan

இறை வணக்கப் பாடல் — பாடகர் குழு
Introit — Choir

ஜெபம் — திரு. ஜான் நேசன்
Prayer — Mr. John Nesan

✝ தொடக்கப் பாமாலை — சபையார்
Opening Hymn — Congregation

பூவின் நற்கந்தம் வீசும்

1 பூவின் நற்கந்தம் வீசும் சோலையாயினும்
நல்ல தண்ணீர் ஓடும் பள்ளத்தாக்கிலேயும்
யேசுநாதர் பின்சென்றேகி மோட்சம் நாடுவேன்,
விண்ணில் சூடும் கிரீடம் நோக்கி ஓடுவேன்.

பின் செல்வேனே, மீட்பர் பின் செல்வேனே,
எங்கேயும், எப்போதும் பின்னே செல்லுவேன்:
பின் செல்வேனே, மீட்பர் பின் செல்வேனே
யேசு காட்டும் பாதை எல்லாம் செல்லுவேன்.

2 கார் மேகம் மேலே மூடும் பள்ளமென்றாலும்,
காற்று வேகமாக மோதும் இடத்திலும்,
யேசு பாதை காட்டச் சற்றும் அஞ்சவேமாட்டேன்:
ரட்சகர் கை தாங்கத் தைரியம் கொள்ளுவேன். - பின் செல்வேனே

3 நாள்தோறும் யேசுநாதர், கிட்டிச் சேருவேன்
மேடானாலும் காடானாலும் பின் செல்லுவேன்:
மீட்பர் என்னை மோசமின்றிச் சுகமே காப்பார்
விண்ணில் தாசரோடு சேர்ந்து வாழ்விப்பார். - பின் செல்வேனே

✝ மாறி மாறி வாசித்தல் 35ம் ஞாயிறு
தேவ ஆராதனை புத்தகம் — சபையார்
பக்கம் 63, சங்கீதம் 103
Psalter Reading –Page 63 Psalm 103 — Congregation

கர்த்தர் இரக்கமுள்ளவர்

✝ தந்தை போற்றி — சபையார்
Gloria Patri — Congregation

துதி ஆராதனை
Singspiration

ஸ்தோத்திர & ஆயரின் ஜெபம் — போதகர். யேசுதாஸ் சார்லஸ்
Thanksgiving & Pastoral Prayer — Pastor. Jesudoss Charles

பரமண்டல ஜெபம் — சபையார்
Lord’s Prayer — Congregation

சிறப்பு பாடல் — பாடகர் குழு
Special Song — Choir

கர்த்தாராம் இயேசுவை துதிப்போம்

கர்த்தாராம் இயேசுவை துதிப்போம் - 2
கரம் குவித்தவரை என்றென்றுமே - 2

1 சோதனையாலுள்ளம் சோர்ந்திட்ட வேளையில் - 2
சொரிந்தனரே பெலன் கிருபையில் நிலைக்க - 2
தூயனை துதித்தென்றும் வாழ்த்திடுவோம் - 2
கர்த்தராம் இயேசுவைத் துதிப்போம் - 2
கரம் குவித்தவரை என்றென்றுமே - 2

2 பாரங்களாலுள்ளம் பதைத்திட்ட வேளையில் - 2
ஆற்றினாரே அன்பின் தூதுகள் அளித்தே - 2
அண்ணலைத் துதித்து நாம் பாடிடுவோம் - 2
கர்த்தாராம் இயேசுவை துதிப்போம் - 2
கரம் குவித்தவரை என்றென்றுமே - 2

3 தேற்றுவாரின்றியே தியங்கின வேளையில் - 2
தாயினும் மேலவர் ஆறுதலளித்தார் - 2
தந்திடுவோம் துதி என்றென்றுமே - 2
கர்த்தாராம் இயேசுவை துதிப்போம் - 2
கரம் குவித்தவரை என்றென்றுமே - 2

✝ காணிக்கை பாடல் — சபையார்
Offertory Song — Congregation

எந்தன் கன்மலையானவரே

எந்தன் கன்மலையானவரே
என்னை காக்கும் தெய்வம் நீரே
வல்லமை மாட்சிமை நிறைந்தவரே
மகிமைக்கு பாத்திரரே

ஆராதனை உமக்கே(4)

1. உந்தன் சிறகுகளின் நிழலில்
என்றென்றும் மகிழச் செய்தீர்
தூயவரே என் துணையாளரே
துதிக்குப் பாத்திரரே - ஆராதனை

2. எந்தன் பெலவீன நேரங்களில்
உம் கிருபை தந்தீரைய்யா
இயேசு ராஜா என் பெலனானீர்
எதற்கும் பயமில்லையே - ஆராதனை

3. எந்தன் உயிருள்ள நாட்களெள்ளாம்
உம்மை புகழ்ந்து பாடிடுவேன்
ராஜா நீர் செய்த நன்மைகளை
எண்ணியே துதித்திடுவேன் - ஆராதனை

✝ பூலோகத்தாரே யாவரும் — சபையார்
Doxology — Congregation

✝ திருமறைப் பாடம் மத்தேயு 16: 1-12 — செல்வன். ஜோயல் ஜான்சன்
Scripture Reading : Matt 16: 1-12 — Master. Joel Johnson

அருளுரை — போதகர். யேசுதாஸ் சார்லஸ்
Sermon — Pastor. Jesudoss Charles

**Beware of the Leaven**

✝ அர்ப்பணகீதம் — சபையார்
Offertory / Closing Song — Congregation

காலத்தின் அருமையை

பல்லவி

காலத்தின் அருமையை அறிந்து வாழாவிடில்
கண்ணீர் விடுவாயே.

அனுபல்லவி

ஞாலத்தில் பரனுனை நாட்டின நோக்கத்தைச்
சீலமாய் நினைத்தவர் மூலம் பிழைத்திடுவாய் - காலத்தின்

சரணங்கள்

1 மதியை யிழந்துதீய வழியிலே நீ நடந்தால்
வருங்கோபம் அறிந்திடாயோ?
கதியாம் ரக்ஷண்ய வாழ்வைக் கண்டு நீ மகிழ்ந்திட
காலம் இதுவே நல்ல காலம் என்றறியாயோ? - காலத்தின்

2 இகத்தினில் ஊழியம் அகத்திடம் நிறைவேற
ஏசுனை அழைத்தாரல்லோ
மகத்துவ வேலையை மறந்து தூங்குவாயானால்
பகற்கால முடியும் ராக்காலத்திலென்ன செய்வாய்? - காலத்தின்

3 நோவாவின் காலத்தில் நூற்றிருபது ஆண்டு
நோக்கிப் பின் அழித்தாரன்றோ?
தாவாத கிருபையால் தாங்கி உனக்களித்த
தவணையின் காலமிவ் வருட முடியலாமே. - காலத்தின்

4 முந்தி எரேமியா அனனியாவுக் குரைத்த
முடிவை நீ யறியாயோ!
எந்தக் காலமும் சிரஞ்சீவியென் றெண்ணிடாமல்
ஏற்ற ஆயத்தமாய் எப்போதும் இருந்திடாயோ! - காலத்தின்

அறிவிப்புகள் — திரு. சாம்ராஜ் ஆசிர் ஜெயராஜ்
Announcements — Mr. Samraj Asir Jeyaraj

✝ முடிவு ஜெபம் & ஆசீர்வாதம்
Closing Prayer & Benediction

✝ ஆசீர்வாதப் பாடல்
Benediction Song

**கர்த்தரே, தற்காரும்**

1. கர்த்தரே, தற்காரும்,
ஆசீர்வாதம் தாரும்,
எங்கள் மேல் உம் முகத்தை
வைத்து, வீசும் ஒளியை.

2. எங்களுக்கன்றன்று
சமாதானம் தந்து
கிறிஸ்தைக் காட்டிப் போதிக்கும்
உமதாவியைக் கொடும்.

3. எங்கள் மீட்பரான
இயேசுவின் மேலான
நாமத்துக்கு மகிமை;
ஆமேன், கேட்பீர் ஜெபத்தை.

✝ *Indicates Congregation standing / சபையார் நிற்கவும்*

Birthday list
1. Mrs Sneha Prem - 27th Aug
2. Master Ben Stelin - 28th Aug
3. Mr Jason Jeevan - 29th Aug
4. Mr. Nithin Samson Sam Sobitharaj - 29th Aug
5. Mr. Govindaraju - 30th Aug
6. Ms. Shiphrah Priya Samuel Ravi - 30th Aug
7. Mrs. Ashita Priya - 31st Aug

Wedding Anniversary list
1. Mr. Premkumar & Mrs. Amutha - 30th Aug